அன்பான பேர்கன்வாழ் தமிழீழ மக்களே!

தமிழீழ மக்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக, தமிழீழ மக்கள் அவை, நாடுகடந்த தமிழீழ அரசு என இருவேறு திட்டங்கள் பற்றி இங்கு விவாதிக்கப்பட்டு வருவதை நீங்கள் அறிவீர்கள். இவ்விரு செயற்திட்டங்களும் ஒன்றுடன் ஒன்று இணக்கப்பாட்டுடனும் கருத்தொற்றுமையுடனும் முன்னெடுக்கப்பட வேண்டியதன் அவசியத்தை தொடர்ச்சியாக வலியுறுத்தி வந்த, பேர்கன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவினராகிய நாம், அவ்வாறான இணக்கப்பாடு ஏற்படும்வரை இத்திட்டங்களோடு இணைந்து செயற்படுவதில்லை என்ற நிலைப்பாட்டுடன் இருந்து வருகிறோம்.

இவ்விரு அமைப்புக்களும் தமக்குள் ஓர் இணக்கப்பாட்டை ஏற்படுத்திக்கொள்ள வாய்ப்பளிக்கும் நோக்கோடும், இது தொடர்பான மக்களின் கேள்விகளுக்கும் சந்தேகங்களுக்கும் பதிலளிக்க சந்தர்ப்பம் வழங்கும் நோக்கோடும், இவ்விரண்டு திட்டங்களோடும் இணைந்து பணியாற்றும் உறுப்பினர்களை அழைத்து ஒரு கலந்துரையாடலை நடாத்த முன்வந்துள்ளோம். இக் கலந்துரையாடலில் மக்கள் அனைவரும் கலந்து கொண்டு தம் சந்தேகங்களையும் கேள்விகளையும் முன்வைக்க முடியும் என்பதை அறியத் தருகிறோம்.

இவ்விரு செயற்திட்டங்களையும் முன்னெடுக்கும் பணியாளர்கள், தமக்குள் ஓர் உடன்பாட்டிற்கு வருவதற்கும், பரந்துபட்ட புரிந்துணர்வுடன் வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்குமான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்திதரும் நோக்குடனேயே இவ்வாறான ஒரு சந்திப்பை நாம் நடாத்த விழைகின்றோம் என்பதை, இதுவரை பேர்கன் தமிழர் ஒருங்கிணைப்புக் குழுவின் உறுதியான நிலைப்பாட்டை ஏற்றுக் கொண்ட மக்கள் அனைவருக்கும் அறியத் தருகிறோம்.

இடம்: Bergen **katedralskole**

காலம்: வியாளக்கிழமை **12.11.2009 மாலை 7 மணி**

**அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.**

ஒழுங்குகள்: தமிழர் ஒருங்கிணைப்புக் குழு, பேர்கன்